**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2023 ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.932/2015

வா.சா.1 நவீனா

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி:-**

1 ம் பிரதிவாதி சொத்து எதுவும் வாங்கவில்லை என்பது பொய் என்றும், கடந்த 13.03.1963 ம் வருடத்திய தாவா 1 வது அயிட்டத்தின் கண்ட 12 வது இணச் சொத்தையும், 08.12.1983-ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி தாவா 2 வது அயிட்டச் சொத்தையும், 23.05.1967 தேதியிட்ட கிரையப்பத்திரப்படி தாவா 4 வது அயிட்டச் சொத்தையும், 23.08.1972, 06.12.1973, 13.12.1973, 26.12.1973 ஆகிய நான்கு கிரைய பத்திரத்தின் மூலம் தாவா 5-வது அயிட்டச் சொத்தை கிரையம் பெற்றார் என்றும், மேற்சொன்ன சொத்துக்கள் எல்லாம் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. மேற் சொன்ன சொத்துக்களில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட சொத்துக்கள் அனைத்திற்கும் வருவாய் துறை ஆவணங்கள் 1 ம் பிரதிவாதி பெயரியில் உள்ளது என்றால் தெரியாது. 2 ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்துக்களில் உரிமையில்லாத போது 2 ம் பிரதிவாதியின் மகளான எனக்கும், மேற்படி சொத்துக்களில் எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1994 ம் வருடத்தில் 1 ம் பிரதிவாதியும், அவரது மகன்களும் நிலம் வாங்கி விற்கும் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார்களா என்றால் தெரியாது. 1994 முதல் 2000 ஆண்டு வரை ரியல் எஸ்டேட் தொழில் நல்ல முறையில் நடந்தது என்றும், அதன் பிறகு தொழில் நஷ்டம் ஏற்பட்டது என்றால் தெரியாது. குடும்ப நலன் கருதி தான் 1 ம் பிரதிவாதியும், அவரது மகன்களும் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார்கள் என்றால் தெரியாது. தாவா 2-வது அயிட்டச் சொத்தில் 1 ம் பிரதிவாதி ஒரு ரைஸ் மில் கட்டியுள்ளார் என்றால் சரிதான், மேற்படி ரைஸ் மில்லுக்குண்டான அனைத்து ஆவணங்களும் 1 ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் தெரியாது. தாவா 1 வது அயிட்ட 16-வது இணச் சொத்தானது கூட்டுறவு வங்கியில் அடமானம் செய்யப்பட்டு ரூ.2,50,000/- கடன் பெறப்பட்டு அந்த கடனானது வட்டியுடன் சேர்ந்து ரூ.9,50,000/-ம் செலுத்த வேண்டியுள்ளது என்றால் தெரியாது.

1 ம் பிரதிவாதி அவரது மகன்களுடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்து அதில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக தான் என்னுடைய பிராதில் சொல்லப்பட்டுள்ள கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய பிராதில் சொல்லப்பட்டுள்ள கிரையங்கள் என்னையும் கட்டுப்படுத்தும் என்றும், அந்த சொத்துக்களில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்களாக இருந்த போதும் கிரையம் பெற்றவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் கிரைய ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அதை பற்றி தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமி யார், யாருக்கு எவ்வளவு விலைக்கு விற்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் பூமி விற்கப்பட்ட விபரம் தெரியும், யார், யாருக்கு எவ்வளவு விஸ்தீரணமுள்ள பூமி விற்பனை செய்யப்பட்ட விபரம் தெரியாது. வா.த.சா.ஆ.6,10 கிரைய ஆவணங்களில் நான் இளவராக இருந்த போது அந்த கிரைய ஆவணங்களில் என்னுடைய பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ஒரு சில ஆவணங்களில் என்னை இளவராக காட்டி கிரையம் கொடுத்துள்ளார்கள், ஒரு சில ஆவணங்களில் என் பெயர் காட்டாமலே கிரையம் கொடுத்துள்ளார்கள். என்னையும் ஒரு தரப்பினராக சேர்த்து கிரையம் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோராமல் நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் வா.த.சா.ஆ.6,10 கிரைய ஆவணம் ஏற்பட்ட நாளிலிருந்து 12 வருடங்களுக்குள் மேற்படி கிரைய ஆவணங்களை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்யப்படாததால் என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்றவர்கள் கிரைய பெற்ற சொத்தின் சுவாதீனம் அடைந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்கள் கிரையம் பெற்றவர்கள் பெயருக்கு ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது.

எந்த எந்த சொத்துக்கள் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தாவா 1-வது அயிட்டச் சொத்தில் சில சொத்துக்களும், 3,4,5 அயிட்டச் சொத்துக்கள் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. தாவா 1-வது அயிட்டச் சொத்தின் ரீ.சர்வே எண்.121/4,5-ல் உள்ள 1.90 ஏக்கர் பூமியில் 1.25 ஏக்கர் பூமியும், ரீ.சர்வே எண். 269/6-ல் 50 செண்ட் பூமியும், ரீ.சர்வே எண்.269/3-ல் 14 ஏர்ஸ் பூமியும், ரீ.சர்வே எண்.267/2-ல் 35 செண்ட் பூமியும் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. தாவா 3-வது அயிட்டச் சொத்தில் 256/2- காலையில் உள்ள 1.50 ஏக்கர் பூமியும், தாவா 4-வது அயிட்டச் சொத்தில் ரீ.சர்வே எண். 135/1,2 காலையில் 3 ஏக்கர் பூமியும், தாவா 5-வது அயிட்டச் சொத்தில் ரீ.சர்வே எண்.135/2,3 காலையில் 1.07 ஏக்கர் பூமியும் கிரையம் கொடுத்துள்ளார்கள்.

1ம் பிரதிவாதி விற்பனை செய்த சொத்துக்களிலும் ஏற்கனவே பிரிவினையான சொத்துக்களிலும் எனக்கு பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவுக்கும், அப்பாவிற்கும் மண முறிவு ஏற்பட்டு விவாகரத்தான போது  எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 10 வயது இருக்கும். என் அப்பாவை பழிவாங்க வேண்டும் என்று என் அம்மா தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**5 முதல் 9, 14, 16 முதல் 19  பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**